# கொழும்புப் பல்கலைக்கழகம் - இலங்கை

## கலைப்பீடம்

## முதலாம் வருட கலைமாணிப் பரீட்சை, பருவம் – II – 2023/2024

## PSC 1202 – இலங்கையின் அரசாங்கம் மற்றும் அரசியல் நோக்குகள்

## நேரம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்

நான்கு (04) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

ஒவ்வொரு விடையும் அதிகபட்சம் பதினைந்து (15) புள்ளிகளைக் கொண்டிருக்கும்.

---

01. “1947 ஆம் ஆண்டு சோல்பரி யாப்பு இந்த நாட்டின் சிங்கள மற்றும் தமிழ் சமூகங்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்திசெய்யத் தவறிவிட்டது.” இக் கூற்றை நுணுக்கமாகப் பரீட்சிக்குக.

02. கலந்துரையாடுக:

(அ) டொமினியன் அந்தஸ்து காலத்தில் இலங்கையின் அரசியல் வழிந்தடத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தாக்கம்.

(ஆ) இலங்கையின் இன விரிசலை நிறுவனமயப்படுத்துவதில் 1948 ஆம் ஆண்டு பிரஜாவுரிமைச் சட்டத்தின் பங்களிப்பு.

03. பின்வருவனவற்றுடன் தொடர்புபடுத்தி இலங்கையில் 1950கள் மற்றும் 1960கள் காலப்பகுதியில் ஏற்பட்ட அரசியல் மற்றும் சமூக மாற்றங்களை நுணுக்கமாகப் பரீட்சிக்குக:

(அ) மத்திய தர வகுப்பினரின் எழுச்சி

(ஆ) பின்-காலனித்துவ சிங்கள தேசியவாதமும் தமிழ் உப-தேசியவாதமும்.

04. “1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்பு இலங்கையில் ‘பொதுத்துறை நிர்வாகத்தின்’ மீதான ‘அரசியல் கட்டுப்பாட்டிற்கு’ வழிவகுத்தது.” இக்கூற்றின் மீதான உமது அபிப்பிராயத்தை விளக்குக.

05. “1978 அரசியல் யாப்பின் கீழ் இடம்பெற்ற மாற்றங்கள் அரசியல் ஸ்திரத்தன்மை, பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் அதிக மையப்படுத்தப்பட்ட தலைமைத்துவம் ஆகியவற்றின் தேவையால் உந்தப்பட்டன.” இக் கூற்றை நுணுக்கமாக மதிப்பீடு செய்க.

06. இலங்கையின் கட்சி முறைமையுடன் தொடர்புபடுத்தி பின்வருவனவற்றை விளக்குக:

அ) 1950 தொடக்கம் 1977 வரையிலான இரு கட்சி முறைமை

ஆ) 1994 தொடக்கம் 2010 வரையிலான கூட்டுக் கட்சி முறைமை

இ) கட்சி அரசியலின் அண்மைக்காலப் போக்குகள்

07. <u>ஒன்றில்</u>

அ) தமிழர்களின் மனக்குறைகளை மரபுசார்அரசியலில் இருந்து வன்முறை அரசியல் செயற்பாடாக நிலைமாற்றுவதற்கு வழிவகுத்த காரணிகளைப் பரீட்சிக்குக.

<u>அல்லது</u>

ஆ) இலங்கை இன மோதலின் மூல காரணிகளை விமர்சன ரீதியாகப் பகுப்பாய்வு செய்க.

08. பின்வருவனவற்றில் ஏதேனும் <u>இரண்டிற்கு (02)</u> குறிப்புகள் எழுதுக:

அ) 1972 அரசியல் யாப்பில் அடிப்படை உரிமைகள்

ஆ) அரசியல் யாப்பிற்கான 13 ம் திருத்தம்

இ) இலங்கையில் இடதுசாரி இயக்கங்கள்

ஈ) 2022 மக்களின் போராட்டம்

உ) 2024 பொதுத் தேர்தல்

***************************